# வாணியம்பாடி நகராட்சி

## 2025-26 ஆம் ஆண்டு வாணியம்பாடி நகராட்சி பேருந்து நிலையத்தில் புதியதாக கட்ட ப்படவுள்ள 11 கடைகள் மாதாந்திர அடிப்படையில் குத்தகை விடுவது முன் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி விளம்பர அறிக்கை

**நகரமன்ற தீர்மான எண். 310 நாள் : 27.11.2025**

வாணியம்பாடி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் 11 கடைகளை 2025-2026 ஆம் ஆண்டு மாத வாடகை குத்தகை அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007 மற்றும் அரசாணை (2U) எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 06.08.2024-ன்படி கடைகள் ஒப்படைத்து அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு முன் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 07,01,2026 ஆம் தேதி புதன் கிழமை முற்பகல் 11.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். முன் ஏலம் / ஒப்பந்தப்புள்ளிக்கு குறிப்பிட்டுள்ள வைப்புத் தொகை தனித்தனியே ஏதாவது ஒரு வங்கியில் "ஆணையாளர், வாணியம்பாடி நகராட்சி " என்ற பெயரில் ஒரு நாள் முன்னதாகவே, அதாவது 06.01.2026 ஆம் தேதிக்குள் கேட்பு வரைவோலையாக பெறப்படல் வேண்டும். டெண்டர் ஷெட்யூல் படிவம் பெற விண்ணப்பிக்கும் போதே அதாவது 06,01.2026 ஆம் தேதி 4.00 மணிக்குள் அசல் கேட்பு வரைவோலையை நகராட்சி அலுவலகத்தில் வழங்கி ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற்றுக் கொள்ள வேண்டும். ஏலத்தில் கலந்து கொள்ளும் போது வரைவோலையின் ஜெராக்ஸ் நகலை காண்பித்து ஏலத்தில் கலந்து கொள்ள வேண்டும். ஒப்பந்தப்புள்ளி இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி ஆவணப்படிவம் விலை ரூ.100/- ஆகும். ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் 06.01.2026 ஆம் தேதிக்குள் ஏல விளம்பர அறிக்கையில் இணைக்கப்பட்ட உரிய படிவத்தினை பூர்த்தி செய்து கோரிய தகவல்களை கொடுக்க வேண்டியது. முன் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி விளம்பர அறிக்கை தேவைப்படுவோர் ரூ.50/-ஐ நகராட்சி கருவூலத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். 2024-2027 குத்தகை ஏல அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் இந்த ஏல ஒப்பந்தப்புள்ளி அறிக்கைக்கு பொருந்தும்.

கடைகளை ஒப்படைக்கும் உரிமைக்கு 07.01.2026 ஆம் தேதி புதன் கிழமையன்று 11.00 மணிக்கு பிறகு நகராட்சி அலுவலகத்தில் ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பகிரங்க ஏலம் விடப்படும். அப்போது ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கேட்க விரும்புவர்கள் அலுவலகத்தால் தெரிவிக்கப்படும் அன்றைய நடைமுறை விதிகள், பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் கேட்க வேண்டும். பொது ஏலம் முடிந்தவுடன் வருகை தந்திருப்பவர்கள் முன்னிலையில் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள இடங்களில் உள்ள கடைகளுக்கு பெறப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி அல்லது ஏலம் அதில் எது அதிகமோ அதனை ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படும், மன்றத்தின் முடிவே இறுதியானது.

ஏலத்தை ரத்து செய்யவோ அல்லது ஒத்தி வைக்கவோ ஆணையாளர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. ஏல வைப்பு தொகை செலுத்துபவரே ஏலம் கோர அனுமதிக்கப்படுவார்கள். உயர்ந்த ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை மன்றத்தின் இறுதி முடிவிற்கு பிறகே வைப்புத் தொகை திரும்ப வழங்கப்படும்.

E:2025/A1/New Shop Tender Note file

Scanned with OKEN Scanner

# நிபந்தனைகள்

9 ஆண்டு குத்தகை இனங்களுக்கு 8 ½ ஆண்டில் வாடகை மறு நிர்ணயக்குழு குத்தகைதாரர்களோடு ஆலோசனை நடத்தி மறு நிர்ணயம் செய்யப்பட்டு தொகையினை, ஏற்கனவே அனுபோகத்தில் உள்ள குத்தகைதாரர் / உரிமதாரர் ஏற்றுக் கொள்ளும் நிலையில் உரிமத்தினை புதுப்பித்து உத்தரவு வழங்கப்படும். சம்மத கடிதம் வழங்கப்படாத நிலையில் இவ்வினங்களுக்கு புது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேற்கொண்டு உரிய காலத்தில் உரிமம் / குத்தகை ஒப்படைக்க வேண்டும்.

ஆண்டு தோறும் வாடகை தொகையை 5% உயர்வு செய்து குத்தகை தொகையினை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

புதிய வணிகப் பயன்பாட்டுக் கட்டிடங்கள் மற்றும் 9 ஆண்டு குத்தகை காலம் முடிவுற்ற பின்னர் வாடகை மறுநிர்ணயம் செய்யப்படும்.

கடையை ஏலம் எடுத்தவர்கள் 12 மாத வாடகை தொகையை கூடுதல் வைப்புத் தொகையாக நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும்

**குத்தகை – வாணியம்பாடி நகராட்சி கடைகள் மாதாந்திர அடிப்படையில் குத்தகைக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் வாடகைக்கு விடுதல் விவரம்**

| வ. எண் | வாணியம்பாடி நகராட்சியில் பேருந்து நிலையத்தில் கட்டப்பட்ட உள்ள கடைகளின் விவரம் | செலுத்த வேண்டிய வைப்பு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | 2 | 5 |
| 1 | கடை எண்.1, பேருந்து நிலையம் புதிய கடை | 3,50,000/- |
| 2 | கடை எண்.2, பேருந்து நிலையம் புதிய கடை | 3,50,000/- |
| 3 | கடை எண்.3, பேருந்து நிலையம் புதிய கடை | 3,50,000/- |
| 4 | கடை எண்.4, பேருந்து நிலையம் புதிய கடை | 3,50,000/- |
| 5 | கடை எண்.5, பேருந்து நிலையம் புதிய கடை | 3,50,000/- |
| 6 | கடை எண்.6, பேருந்து நிலையம் புதிய கடை | 3,50,000/- |
| 7 | கடை எண்.7, பேருந்து நிலையம் புதிய கடை | 3,50,000/- |
| 8 | கடை எண்.8, பேருந்து நிலையம் புதிய கடை | 3,50,000/- |
| 9 | கடை எண்.9, பேருந்து நிலையம் புதிய கடை | 3,50,000/- |
| 10 | கடை எண்.10,பேருந்து நிலையம் புதிய கடை | 3,50,000/- |
| 11 | கடை எண்.11, பேருந்து நிலையம் புதிய கடை | 3,50,000/- |

ந.க.எண்.1643/2025/அ1
நாள் : 05.12.2025
இடம் : வாணியம்பாடி நகராட்சி

ஆணையாளர்
வாணியம்பாடி நகராட்சி

5/12/25

E:2025/A1/New Shop Tender Note file

Scanned with OKEN Scanner